**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## சாதாரணக் கூட்டப்பொருள்

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 31.01.13 | 1. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான டி.என் 69 5719 கழிவுநீர் லாரி 10.09.1991ல் வாங்கப்பட்டது. வண்டியின் Chassis, Spring Leaf, டிங்கர் வேலையினை பார்ப்பதற்கு செலவுத் தொகை ரூ.49700/— மாமன்றத்தின் அனுமதி வேண்டி கூடுதல் செலவினத் தொகை ரூ.49700/— செய்ய வேண்டியுள்ளது. தற்போது அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் கூடுதல் செலவினம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அங்கீகரிக்கலாம். | 1) அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான டி.என் 69 5735 குடிநீர் லாரி வாகனம் 26.09.2003ல் வாங்கப்பட்டது. தொடர்ச்சியான பயன்பாட்டில் உள்ளது. தற்போது அதில் ஏற்பட்ட பிரேக், கிளட்ச், கேபின், ரேடியேட்டர், பேட்டரி மாற்றுதல் மற்றும் வாகனம் முழுதுமாக டிங்கர் வேலை, ஓவராயிலிங் வேலையினை பார்ப்பதற்கு செலவுத்தொகை ரூ.116000/— ஆகிறது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி கூடுதல் செலவுத் தொகை ரூ.116000/— செய்ய வேண்டியுள்ளது. தற்போது அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி மேற்கொள்ள கூடுதல் செலவினம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ6/19924/12 | 2) அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சி அலுவலர் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக சென்னை மற்றும் இதர வெளியூர்களுக்கு சென்று வந்ததற்கான பயணத்தொகை மற்றும் இதரப் படிகள் ஆகியவற்றை ஜனவரி 2013 முதல் டிசம்பர் 2013 வரை ஓர் ஆண்டு காலத்திற்கு உரிய விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் வழங்கவும், அதற்கான அதிகார அளிப்பை தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு எண். 13இன்படி மாநகராட்சி ஆணையருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி4/21789/09 | 3) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 4. இம்மாநகராட்சி வார்டு எண். 49ல் S.N.R. நகர், வள்ளிநாயகபுரம், கால்டுவெல் காலனி பகுதிகளில் தற்போது பெய்த மழையில் சாலையில் மழைநீர் தேங்கியதால், சாலையில் கிணற்று சரள் நிரப்பி சாலையை சீர் செய்யும் பணிக்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 162247/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண்.265/12 – 13 | 4) பதிவு செய்யப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சி வார்டு எண்.47 பிரையண்ட் நகர், மன்னர் காலனி, 12வது தெருபகுதி சிவந்தாகுளம் பகுதிகளில் தற்போது பெய்த மழையில் சாலையில் மழைநீர் தேங்கியதால், சாலையில் கிணற்று சரள் நிரப்பி சாலையை சீர் செய்யும் பணிக்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ.99095/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு<br><br>எண் 263/12–13 | 5) பதிவு செய்யப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சி வார்டு எண்.48 கணேசன் காலனி, இந்திரா நகர், சாந்தி நகர், பாரதி நகர் மற்றும் அமுதா நகர் பகுதிகளில் தற்போது பெய்த மழையில் சாலையில் மழைநீர் தேங்கியதால், சாலையில் கிணற்று சரள் நிரப்பி சாலையை சீர் செய்யும் பணிக்கு மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ.172568/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 264/12–13 | 6) பதிவு செய்யப்பட்டது |
| | 7. இம்மாநகராட்சி வி.வி.டி. நீர்த்தேக்க நிலையத்திலுள்ள 300 MM A.C டெலிவரி மெயின் உடைந்து குடிநீர் வீணாவதை புதிய இரும்பு குழாய் பொருத்தி சரி செய்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 73797/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண். 300/12–13 | 7) பதிவு செய்யப்பட்டது |
| | 8. இம்மாநகராட்சி இராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்திலுள்ள 400mm பைபாஸ் வால்வு வெளி வால்வுகள் மற்றும் 300mm வால்வு சேதமடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதை சீரமைக்கவும், பாலவிநாயகர் கோவில் தெருவில் 300மி.மீ. A.C. மெயின் உடைப்பு சரிசெய்து குடிநீர் விநியோகம் சீரமைக்கவும், மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.132306/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>மதிப்பீடு எண் 275/12–13 | 8) பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>9. இம்மாநகராட்சி வார்டு எண். 34ல் மடத்தூர் E.B. காலனி துரைக்கனி நகர், நியூசுந்தர நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் பகிர்மான குழாய் நெடுஞ்சாலையின் குறுக்கே வருவதால் அடிக்கடி சேதமடைந்து குடிநீர் விநியோக பாதிப்பு ஏற்படுவதை புதிய இரும்பு குழாய்கள் பதித்து விநியோகத்தை சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 48940 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு:</u> மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>ம.ப.எண் 252/12–13</td>
<td>9) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>10. தூத்துக்குடி மாநகர பொது மக்களின் நலன் கருதி, இம்மாநகராட்சி பகுதிகளில் சுற்றி திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மன்ற அனுமதி பெற்று நடைபெற்று வரும் நிலையில் தெரு நாய்களின் இனப்பெருக்கத்தால் நிகழும் போக்குவரத்து பாதிப்பு மற்றும் சுகாதார கேட்டினை தடுக்கும் பொருட்டு மேலும் 500 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை மாமன்ற முன் அனுமதி பெற்று செய்யவும் அதற்கான உத்தேச செலவினங்களை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>குறிப்பு – அனுமதிக்கலாம். எச்4. 11648/2010</td>
<td>10) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>11. இம்மாநகராட்சி அலுவலகத்தில், முக்கியமான இடங்களில் 9 எண்ணம் கண்காணிப்பு கேமராக்களை, அவற்றுக்குரிய உபசாதனங்களுடன் அமைப்பதற்கு கீழ்க்காணும் விவரப்படி ஏழு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனங்களின் பெயர்</th><th>விலைப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் எஸ்ஸார் மார்க்கெட்டெர்ஸ், திருநெல்வேலி–6</td><td>ரூ. 135200/–</td></tr>
<tr><td>2.</td><td>மெசர்ஸ் ஐஸ்வர்யா டெலிகாம், திருநெல்வேலி–7</td><td>ரூ. 137700/–</td></tr>
<tr><td>3.</td><td>மெசர்ஸ் மூர்த்தி எண்டர்பிரைசஸ், திருநெல்வேலி–6</td><td>ரூ. 141450/–</td></tr>
<tr><td>4.</td><td>மெசர்ஸ் ஸ்ரீசக்தி சிஸ்டம், தூத்துக்குடி–2</td><td>ரூ. 134700/–</td></tr>
<tr><td>5.</td><td>மெசர்ஸ் அல்டிமேட் கம்யூட்டர் கேர், தூத்துக்குடி–2</td><td>ரூ. 144090/–</td></tr>
<tr><td>6.</td><td>மெசர்ஸ் கிருஷ்ணா கம்யூட்டர் சர்வீசஸ், தூத்துக்குடி–2</td><td>ரூ. 147850/–</td></tr>
<tr><td>7.</td><td>மெசர்ஸ் மாட்ரிக்ஸ் டெக்னாலஜி, தூத்துக்குடி–3</td><td>ரூ. 151200/–</td></tr>
</table>
<br>மேற்படி ஏழு நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் ஸ்ரீசக்தி சிஸ்டம் நிறுவனத்தினர் மற்றவர்களை விட மிகக் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.134700/–க்கு கொடுத்துள்ளார்கள்.<br><br>எனவே மேற்படி நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு, கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு உரிய வேலை உத்திரவு வழங்குவதற்கும், மேற்படி விலைப்புள்ளி தொகை ரூ.134700/–ஐ மெசர்ஸ் ஸ்ரீசக்தி சிஸ்டம் நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>11) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி பணிகளுக்கும் மற்றும் ஆகும் உத்தேச செலவு ரூ.200000/– தொகைக்கும் மாமன்றம் தனது தீர்மானம் எண் 205 நாள் 26.09.2012ல் அனுமதி வழங்கியுள்ளது.

இ5/18420/12

12. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பண்டாரம்பட்டி சாலை, பேட்ரிக் சர்ச் தெரு வடக்குப் பகுதி, லையன்ஸ் டவுண், அத்திமரப்பட்டி காமராசர் சாலை, வரதவிநாயகர் கோவில் தெரு மீளவிட்டான் பகுதி மின்வாரிய காலனி மற்றும் நியூ சுந்தர் நகர், பாரதி நகர், கருப்பசாமி நகர், அபிராமி நகர் ஆகிய பகுதிகளில் பிளாஸ்டிக் சாலை அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாகஆணையர் கடிதம் எண். 29225/2011/இ3 நாள் 25.09.2012ல் ரூ. 113.56 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் மாமன்ற தீர்மான எண். 233 நாள் 29.11.2012 அன்று அனுமதி வழங்கப்பட்டு 26.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு 3.1.2013 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டது. மேலும் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப ரீதியாக தகுதி உடையவர்களாக இருப்பதால் இரண்டு விலைப்புள்ளி உறைகள் 7.01.2013 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) | திரு.எஸ்.ரம்போலா, ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 4.73 சதவிகிதம் அதிகம் |
| 2) | திரு.எஸ். சுதர்சன், ஒப்பந்தக்காரர் | மதிப்பீட்டை விட 6.37 சதவிகிதம் அதிகம் |

வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.எஸ். ரம்போலா (மதிப்பீட்டை விட 4.73 சதவிகிதம் அதிகம்) அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 3.42 சதவிகிதம் அதிகம் கொடுத்துள்ளார். மேலும் பொறியியல் கையேடு Chapter – II எண் 2.7.2 ல் உள்ளபடி பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5 சதவிகிதம் அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தார் விலை தற்போது அதிகமாக இருப்பதாலும் ஒப்பந்தக்காரரின் விலைக்குறைப்பின் படி (மதிப்பீட்டை விட 3.42 சதவிகிதம் அதிகம் ரூ.1,23,73,054.39) மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல் செலவினம் பொது நிதியில் செலவு செய்யலாம்.

இ1/19689/2012

12) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சி கதிர்வேல்நகர், கால்டுவெல் காலனி, கிருபா நகர் மற்றும் சத்யா நகர் பகுதிகளிலுள்ள பகிர்மான குழாய்களில் கசிவு ஏற்பட்டு குடிநீர் வீணாவதை சரிசெய்யவும் மேற்படி பகுதி பகிர்மான குழாய்களிலுள்ள பழுதடைந்த வால்வுகளை மாற்றி குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ.106416/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.

மதிப்பீடு எண் 331/12–13

13) பதிவு செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| | 14. இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் வரும் 700mm PSC பிரதான குழாயில், தலைமை நீரேற்று நிலையத்தின் கிழக்கு பகுதியில் ஏற்பட்ட கசிவு சரிசெய்து பம்பிங் சீரமைக்கவும், வாகைக்குளம் மேற்கு பகுதியில் 600mm PSC தன்னோட்ட குழாயில் ஏற்பட்ட கசிவு சரிசெய்யவும், தரைமட்ட நீர்த்தேக்க நிலையத்தினுள் நீர்த்தேக்கத் தொட்டியில் மூடிகள் புதியதாக செய்து பொருத்தவும், மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.73004/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 333/12–13 | 14) பதிவு செய்யப்பட்டது |
| | 15. இம்மாநகராட்சி வார்டு எண். பெருமாள்புரம் 2வது தெருவிலுள்ள கழிவுநீர் கால்வாயில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தேங்குவதை சரி செய்ய அப்பகுதியில் புதிய 250மி.மீ. குழாய் பதித்து கழிவுநீர் கால்வாயை சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 20,288/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 259/12–13 | 15) பதிவு செய்யப்பட்டது |
| | 16. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மாவட்ட ஆட்சித்தலைவர் மாநாட்டில் தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பாக, புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளதை தொடர்ந்து தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண் 214 நாள் 15.10.2012இல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தேர்தல் வாக்குறுதி என்பதாலும் மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் அண்ணா பேருந்து நிலையத்தை எஸ்.ஏ.வி.பள்ளி விளையாட்டு மைதானம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை மற்றும் அண்ணா பேருந்து நிலைய மேற்கு பக்கமுள்ள தென்வடல் சாலை இடமும் சேர்ந்தாற்போல் விரிவாக்கம் செய்து, அவ்விடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கொண்டு வரப்பட வேண்டும் என தீர்மானித்தது.<br><br>அதன் பேரில் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருநெல்வேலி அவர்களுக்கு இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் 17699/சிஇ1/2012, 21.11.2012 நாளிட்ட கடிதத்தில் பழைய பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டு வரும் போக்குவரத்து கழக பணிமனை இடத்திற்கு பதிலாக புதிய பேருந்து நிலையத்தில் உள்ள காலி இடத்தில் குறைந்தபட்சம் 1.33 ஏக்கர் பரப்பளவிற்கு குறையாமல் காலி நிலம் வழங்குவதற்கும், புதிய பணிமனை கட்டுமான பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் நிதி ரூ.1.50 கோடியினை முன்னதாகவே மாநகராட்சி நிர்வாகத்தால், போக்குவரத்து கழகத்திற்கு வழங்கிடவும், கட்டுமான பணிகள் முடிப்பதற்கு தேவையான ஒரு வருட கால அளவு அவகாசம் வழங்கி ஒப்புதல் வழங்கும்பட்சத்தில் மேற்படி கழகத்தின் குழுமக்கூட்டத்தில் விவாதித்து அதனடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளின் பேரில் உரிய பதில் மாநகராட்சிக்கு தெரிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார்கள்.<br><br>எனவே மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருநெல்வேலி அவர்களின் கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் முடிவு செய்யலாம்.<br>இ1/15104/2011 | 16) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டம் என்பதால், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் விரைந்து அமைக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.1.50 கோடி மற்றும் ஒரு வருட கால அவகாசம் ஆகியவற்றை பொதுமக்கள் நலன்கருதி முடிந்த அளவு குறைவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 17. இம்மாநகராட்சி வார்டு எண் 43, பிரையண்ட்நகர் 7வது தெரு, மத்திய பிரதான சாலையின் மேற்கு பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதியில் 3.96மீ x 3.05மீ அளவில் நிழற்குடை ஒன்று மாமன்ற உறுப்பினர் திரு. எம். ஜெயக்குமார் அவர்களின் சொந்த செலவில் நிறுவுவதற்கும், அதனை தொடர்ந்து அன்னாரது சொந்த செலவில் பராமரிப்பு செய்ய கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே ஒரு பயணியர் நிழற்குடை இருந்து வந்தது. தற்போது மேற்படி நிழற்குடை பழுதடைந்து இருந்ததாலும் அவ்வழியே மாநகராட்சியால் வடிகால் அமைக்க வேண்டியிருந்ததால் அதனை அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.<br><br>எனவே பொதுமக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணிகளின் நலனை கருத்திற்கொண்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.ஜெயக்குமார் அவர்களின் சொந்த செலவில் மேற்கண்ட இடத்தில் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கும், தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு அன்னாரின் சொந்த செலவில் பராமரிப்பு செய்வதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1) வார்டு எண் 43, பிரையண்ட்நகர் 7வது தெரு மத்திய பிரதான சாலையின் மேற்கு பகுதியில் மாமன்ற உறுப்பினர் திரு. எம்.ஜெயக்குமார் அவர்களின் சொந்த செலவில் மேற்கண்ட இடத்தில் 3.96மீ x 3.05மீ அளவில் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கும், தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு அன்னாரின் சொந்த செலவில் பராமரிப்பு செய்வதற்கும், மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட நிழற்குடை அமைக்கும் பணி மற்றும் தொடர் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் போது மாநகராட்சி அலுவலகத்தில் உரிய அனுமதி பெற்று, மாநகராட்சி அலுவலர்களின் முன்னிலையில் பணிகள் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம்<br><br>இ1/478/2013 | 17) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 18. இம்மாநகராட்சி வார்டு எண் 1, 2, 3, 5, 17, 18, 48, 49, 50 ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள தெரு பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாததால், பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு மாநகராட்சி மூலம் ஒப்பந்த முறையில் வாடகை அடிப்படையில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய இவ்வலுவலக வேலை உத்திரவு ஆணை எண் 8451/2012/இ3, நாள் 13.12.2012இல் திரு.எஸ்.வெங்கட சுப்புராஜ், 107/43, டி.எம்.பி.காலனி, தூத்துக்குடி அவர்களுக்கு லாரி ஒன்றுக்கு நடை ஒன்றுக்கு ரூ.438/– என இரண்டு மாத காலத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.<br><br>தற்போது மேற்கண்ட குடிநீர் விநியோகம் 31.01.2013 உடன் முடிவடைவதாலும், மேற்படி ஒப்பந்தகாரர் 24.01.2013 தேதிய மனுவில் லாரி நடை ஒன்றுக்கு ரூ.438/–க்கு கால நீடிப்பு செய்து தர கோரியதின் அடிப்படையிலும் மாநகரத்தில் மேற்படி பகுதியில் நிலவி வரும் கடும் குடிநீர் வறட்சியை கருத்திற்கொண்டு மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகையான லாரி ஒன்றுக்கு, நடை ஒன்றுக்கு ரூ.438/– என்ற விலை விகிதத்தில் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.43.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 18) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1) ஏற்கனவே லாரி மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்து வரும் திரு.எஸ்.வெங்கடசுப்புராஜ் என்பவருக்கு லாரி ஒன்றுக்கு, நடை ஒன்றுக்கு ரூ.438/– என்ற விலைவிகிதத்தில் தொடர்ந்து ஆறு மாத காலம் ஒப்பந்த அடிப்படையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை திருத்திய வரவு செலவினத்தில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/8451/2012 | |

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.

இடம்: தூத்துக்குடி
நாள் : 24.01.2013